සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ගිණුම්කරණය I
கணக்கீடு I
Accounting I

33 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து, **அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **சமமான** புள்ளிகள் உரித்தாகும்.
- உங்கள் **சுட்டெண்ணை** மேலே கொடுக்கப்பட்டுள்ள கூட்டினுள் தெளிவாக எழுதுக.
- **செய்நிரலாக்கத்தகா (Non-Programmable) கணிப்பான்கள்** பயன்படுத்துவதற்கு **அனுமதிக்கப்படும்.**

சுட்டெண் : ..................................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்**

| | ஒப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

| வினாத்தாள் I இற்கானது | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| மொத்தம் | |

**1.** பின்வரும் கூற்றுகளுள் எது நிறுவனமொன்றின் நிதிக்கணக்கீட்டின் பிரதான நோக்கத்தை **மிகச் சிறப்பாக** விபரிக்கின்றது?

(1) சட்டத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நிறுவனத்தின் கடந்தகால நிதித் தகவல்களை அறிக்கையிடல்.
(2) பொதுநோக்குடைய நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல்.
(3) முதலீட்டாளர்கள் மற்றும் கடன் வழங்கியோருக்கு நிறுவனத்தைப் பற்றிய குறிப்பான நிதித் தகவல்களை வழங்குதல்.
(4) கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் பொதுநோக்குடைய நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல்.
(5) நிறுவனத்தின் அக்கறையுடைய வெளியகத் தரப்பினர் தீர்மானம் மேற்கொள்வதற்கான தகவல்களை வழங்குதல். (......)

**2.** நிறுவனமொன்று எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்குத் தனது செயற்பாடுகளைத் தொடர முடியாது உள்ளது. பின்வரும் கணக்கீட்டு எண்ணக்கருக்களுள் எவை இந்நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது **பொருத்தமற்றவை** ஆகும்?

(1) தொழில் முழுமை மற்றும் அட்டுறு
(2) தொழில் முழுமை மற்றும் பண அளவீடு
(3) தொடர்ந்தியங்குதல் மற்றும் வரலாற்றுக்கிரயம்
(4) தோற்றத்திலும் பார்க்கக் கருத்து முக்கியம் மற்றும் தேறல்
(5) முன்னெச்சரிக்கை மற்றும் தேறல் (......)

**3.** தொழில் முழுமை எண்ணக்கருவின் பிரயோகம் தொடர்பில் பின்வரும் கூற்றுகளுள் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - வணிகமொன்றின் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் வணிகத்தின் முன்னோக்கிய பார்வையில் பதியப்படுகின்றன.
B - இந்த எண்ணக்கருவானது அறிக்கையிடும் நிறுவனத்தை அடையாளம் காண்பதற்கான அடிப்படையை வழங்குகிறது.
C - வணிகமொன்றின் உரிமையாளர்களின் முதலீடானது அந்நிறுவனத்தின் வளங்கள் மீதான கோரிக்கையொன்றாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

[பக். 2 ஐப் பார்க்க

CamScanner

- **4, 5, 6, 7 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக.**

சந்திரா சில்லறை வணிகமானது 01.01.2024 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வணிகமானது பெறுமதிசேர் வரிக்காகப் (VAT) பதிவு செய்யப்பட்டுள்ளது. 2024 ஜனவரி மாதத்தில் வணிகத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்தன.

| இல. | கொடுக்கல் வாங்கல் |
|---|---|
| 1 | ரூ. 240 000 கிரயமான பொருட்கள் அமலுக்கு ரூ. 354 000 க்குக் கடனுக்கு விற்கப்பட்டன. (ரூ. 54 000 VAT உட்பட). |
| 2 | ரூ. 30 000 காசுக்கழிவு அனுமதிக்கப்பட்ட பின் முழுக் கடன் தொகையினைத் தீர்ப்பதற்கென அமலிடமிருந்து காசோலையொன்று பெறப்பட்டது. |
| 3 | ரூ. 320 000 கிரயமான பொருட்கள் ரூ. 472 000 காசுக்கு விற்கப்பட்டன. (ரூ. 72 000 VAT உட்பட). |
| 4 | ரூ. 400 000 கிரயமான பொருட்கள் விமலுக்கு ரூ. 590 000 கடனுக்கு விற்கப்பட்டன. (ரூ. 90 000 VAT உட்பட). |
| 5 | விமலுக்கு ரூ. 118 000 க்கு விற்கப்பட்ட பொருட்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளன (ரூ. 18 000 VAT உட்பட). இப்பொருட்களின் கிரயம் ரூ. 80 000 ஆக இருந்தது. |

**4.** பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளுள் எது கொடுக்கல் வாங்கல்கள் இல **1** மற்றும் **2** இன் **தேறிய தாக்கத்தினைப்** பிரதிபலிக்கின்றது?

| | சொத்துக்கள் (ரூ.' 000) | = பொறுப்புக்கள் (ரூ.' 000) | + உரிமையாண்மை (ரூ.' 000) |
|---|---|---|---|
| (1) | + 84 | + 54 | + 30 |
| (2) | + 84 | – | + 84 |
| (3) | + 114 | + 54 | + 60 |
| (4) | + 114 | – | + 114 |
| (5) | + 144 | + 54 | + 90 |

(……)

**5.** கொடுக்கல் வாங்கல்கள் இல **3, 4** மற்றும் **5** ஆகியவற்றை சந்திரா வணிகத்தின் புத்தகங்களில் அவை நிகழ்ந்த ஒழுங்கில் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்கள்:

(1) பற்றுச்சீட்டு, பட்டியல், வரவுத்தாள் (2) பற்றுச்சீட்டு, பட்டியல், செலவுத்தாள்
(3) வைப்புச்சிட்டை, பட்டியல், வரவுத்தாள் (4) வைப்புச்சிட்டை, பட்டியல், செலவுத்தாள்
(5) பற்றுச்சீட்டு, பட்டியல், நாட்குறிப்பிற்கான உறுதிச்சீட்டு

(……)

**6.** 2024 ஜனவரி மாதத்துக்கான சந்திரா வணிகத்தின் விற்பனை நாளேட்டின் மொத்தத்தை அதன் பொதுப்பேரேட்டுக்கு மாற்றுவதற்கான சரியான இரட்டைப்பதிவு எது?

| | விபரம் | வரவு (ரூ.' 000) | செலவு (ரூ.' 000) |
|---|---|---|---|
| (1) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 800 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | 144 | |
| | விற்பனைக் கணக்கு | | 944 |
| (2) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 826 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 126 |
| | விற்பனைக் கணக்கு | | 700 |
| (3) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 944 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 144 |
| | விற்பனைக் கணக்கு | | 800 |
| (4) | காசுக்கணக்கு | 472 | |
| | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 826 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 198 |
| | விற்பனைக் கணக்கு | | 1100 |
| (5) | காசுக்கணக்கு | 472 | |
| | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 944 | |
| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு | | 216 |
| | விற்பனைக் கணக்கு | | 1200 |

(……)

**7.** சந்திரா வணிகத்தின் 31.01.2024 இல் உள்ளவாறான VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (கொள்வனவின் மீதான VAT ஐப் புறக்கணிக்குக) மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குமீதி:

| | VAT கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி (ரூ.' 000) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - வரவு மீதி (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | வரவு 198 | 430 |
| (2) | செலவு 126 | 472 |
| (3) | செலவு 144 | 502 |
| (4) | செலவு 198 | 472 |
| (5) | செலவு 216 | 502 |

(……)



CamScanner

8. கம்பனியொன்றின் வரைபு நிதிக் கூற்றுகளின்படி 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான தேறிய இலாபம் ரூ. 5 000 000 ஆகும். இந்த வரைபு நிதிக் கூற்றுகளை தயாரித்ததன் பின்னர் பின்வரும் வழுக்களானது வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

- விற்பனை நாளேட்டின் மொத்தமான ரூ. 8 500 000 ஆனது பொதுப் பேரேட்டில் ரூ. 5 800 000 ஆக பதியப்பட்டுள்ளது.
- சென்மதியான விற்பனைத் தரகு ரூ. 450 000 ஆனது விற்பனைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் விற்பனைத் தரகு சென்மதி கணக்கில் செலவு வைக்கப்பட்டும் உள்ளது.
- ரூ. 850 000 வங்கிக் கடன் தவணைக் கட்டணமானது செலுத்தப்பட்டிருந்ததுடன் அது வங்கி கடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் காசுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமுள்ளது. எனினும், இத்தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கியிருக்கும் ரூ. 150 000 வட்டியானது செலவொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

இக்கம்பனியின் மேற்படி வழுக்கள் திருத்தப்பட்ட பின்னரான தேறிய இலாபம் (ரூ.'000):

(1) 2450 (2) 7100 (3) 7550 (4) 7700 (5) 8000 (......)

9. வணிகமொன்றின் உரிமையாளர் ரூ. 56 000 கிரயமான பொருட்களை 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் பற்றாக எடுத்துள்ளார். இது தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் எதுவித சீராக்கமும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், இறுதி இருப்பானது 31.03.2024 இல் இருக்கக்கூடிய பௌதிக இருப்பின் அடிப்படையில் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவ்வணிகத்தின் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபமானது முறையே ரூ. 250 000 மற்றும் ரூ. 120 000 ஆக கணிக்கப்பட்டுள்ளது.

கணக்குப் புத்தகங்களில் பொருட்கள் பற்றானது முறையாகச் சீராக்கம் செய்யப்பட்டிருப்பின் இவ்வணிகத்தின் சரியான மொத்த இலாபம் மற்றும் தேறிய இலாபம்:

| | மொத்த இலாபம் (ரூ.'000) | தேறிய இலாபம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 194 | 64 |
| (2) | 250 | 120 |
| (3) | 250 | 176 |
| (4) | 306 | 120 |
| (5) | 306 | 176 |

(......)

10. பின்வரும் தகவல்கள் தனி வியாபாரியான ஆரன் நிறுவனத்தின் வியாபாரக்கடன்பட்டோருடன் தொடர்புடையவை.

- ஐயக்கடன் ஒதுக்கீட்டிற்கான கணக்கின் செலவு மீதியானது 01.04.2023 இல் ரூ. 70 000 ஆக இருந்தது.
- 31.03.2024 இலுள்ளவாறான வியாபாரக் கடன்பட்டோர் (அறவிட முடியா மற்றும் ஐயக் கடன்களுக்கான சீராக்கலுக்கு முன்னர்) ரூ. 1 050 000 ஆக இருந்தது.
- 31.03.2024 இலுள்ளவாறான கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெறவேண்டிய ரூ. 50 000 ஆனது அறவிட முடியாக் கடனாக பதிவழிக்கப்படல் வேண்டும்.
- இந்நிறுவனமானது 31.03.2024 இலுள்ளவாறான கடன்பட்டோர் மீதியில் 4% ஐயக்கடன்களுக்கான ஒதுக்கீடாகச் செய்யப்பட வேண்டுமென தீர்மானித்துள்ளது.

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்காக இனங்காணப்பட்ட அறவிட முடியா மற்றும் ஐயக்கடன்களுக்கான செலவுகள் மற்றும் 31.03.2024 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட கடன்பட்டோரின் கொண்டு செல் தொகை:

| | அறவிட முடியா மற்றும் ஐயக்கடன்கள் செலவுகள் (ரூ.'000) | வியாபாரக் கடன்பட்டோரின் கொண்டு செல் தொகை (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 20 | 960 |
| (2) | 20 | 1000 |
| (3) | 80 | 970 |
| (4) | 80 | 1000 |
| (5) | 90 | 960 |

(......)

- **11, 12 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

உற்பத்தி நிறுவனமொன்றான மிதிலா வணிகத்தின் கணக்கீட்டுப் புத்தகங்களிலிருந்து பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | 31.03.2024 இல் உள்ளவாறு (ரூ.'000) | 31.03.2023 இல் உள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| உற்பத்தி இயந்திரம் - கொண்டுசெல் தொகை | 675 | 800 |
| இருப்பு - மூலப்பொருட்கள் | 45 | 60 |
| இருப்பு - முடிவுப்பொருட்கள் | 160 | 120 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் - மூலப்பொருள் கொள்வனவுகள் | 15 | 20 |

011022

[பக். 4 ஐப் பார்க்க

CamScanner

31.03.2024 இல் முடிவடையும் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட காசுக்கொடுப்பனவுகள் பின்வருமாறு:

| | ரூ.'000 |
|---|---|
| செலுத்திய நேர் ஊழியக் கிரயம் | 300 |
| வியாபாரக் கடன்கொடுத்தோருக்குச் செலுத்திய காசு | 150 |
| செலுத்திய உற்பத்தி மேந்தலைகள் | 75 |

**மேலதிக தகவல்கள்:**

- எல்லா மூலப் பொருள் கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
- 31.03.2024 இலும் 31.03.2023 இலும் நடைமுறை வேலை மற்றும் அட்டுறு செலவுகள் எதுவும் இருக்கவில்லை.
- இவ்வருடத்தில் இயந்திரக் கொள்வனவுகளோ, இயந்திர அகற்றல்களோ இடம்பெறவில்லை.

**11.** 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த உற்பத்திக் கிரயம் (ரூ.000):
(1) 505 (2) 535 (3) 630 (4) 660 (5) 665 (......)

**12.** 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான விற்பனைக் கிரயம் (ரூ.000):
(1) 495 (2) 575 (3) 590 (4) 620 (5) 700 (......)

**13.** 1890 பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி பின்வரும் கூற்றுகளில் **சரியானவை** எவை?

A - பங்காளர்கள் வணிகத்தின் இலாபங்களையும் நட்டங்களையும் சமமாகப் பகிர்வதற்கு உரித்துடையவர்கள்.

B - பங்குடமையின் நிர்வாகத்தில் ஈடுபடும் பங்காளர்கள் ஊதியத்தைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

C - பங்காளர்கள் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மீது வட்டியைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர்களல்லர்.

D - பங்காளர்கள் தமது சொந்த நிதியினை வணிகச் செயற்பாடுகளுக்காகச் செலவு செய்திருப்பின் அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தடையவராவர்.

(1) A, C மாத்திரம் (2) A, D மாத்திரம் (3) B, C மாத்திரம்
(4) A, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகிய எல்லாம் (......)

- **14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

அருணும், பவனும் இலாப நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து பங்குடமையொன்றினை நடத்தி வருகின்றனர். பங்குடமை உடன்படிக்கையின் படி ஒவ்வொரு பங்காளரும் வருடாந்தம் ரூ. 1 200 000 சம்பளத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராவர். 01.04.2023 இலுள்ளவாறு பின்வரும் ஆரம்ப மீதிகள் பங்குடமையின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| பங்காளர் | மூலதனக்கணக்கு - செலவு (ரூ.'000) | நடைமுறைக்கணக்கு - செலவு (ரூ.'000) |
|---|---|---|
| அருண் | 6 000 | 800 |
| பவன் | 5 000 | 600 |

இவ்வருடத்தில் அருணும், பவனும் முறையே ரூ. 600 000, ரூ. 400 000 ஐ மேலதிக மூலமதனமாக ஈடுபடுத்தியிருந்தனர். மேலும் இவ்வருடத்தில் ஒவ்வொரு பங்காளரும் தமது சம்பளங்களில் ரூ. 1 000 000 வை காசாக எடுத்திருந்தனர். ஒவ்வொரு பங்காளரதும் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபப்பங்கு ரூ. 300 000 ஆக இருந்தது.

**14.** 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமையின் இலாபம் (ரூ.000):
(1) 600 (2) 1 500 (3) 2 400 (4) 2 600 (5) 3 000 (......)

**15.** 31.03.2024 இல் உள்ளவாறான பங்குடமையின் உரிமையாண்மை (ரூ.000):
(1) 12 000 (2) 13 400 (3) 14 400 (4) 15 400 (5) 16 400 (......)

- **16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் தகவல்களானது சுமனன் PLC இன் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானது.

| | ரூ.'000 |
|---|---|
| விற்பனைக் கிரயம் | 6 500 |
| மொத்த இலாபம் | 3 500 |
| ஏனைய வருமானம் | 1 600 |
| வருடத்துக்கான இலாபம் | 2 200 |
| மீள்மதிப்பீட்டு மிகை - மோட்டார் வாகனங்கள் | 1 000 |
| மீள்மதிப்பீட்டு குறை - இயந்திரம் | 800 |

இயந்திரமானது 31.03.2022 இல் முதற் தடவையாக மீள்மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதனால் மிகையாக ரூ. 450 000 ஏற்பட்டிருந்தது. நடைமுறை வருடத்தில் மோட்டார் வாகனங்கள் முதற் தடவையாகவும் இயந்திரமானது இரண்டாம் தடவையாகவும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபத்தினைக் கணிக்கும் போது மோட்டார் வாகனங்களின் மீள்மதிப்பீட்டு மிகை ரூ. 1 000 000 ஆனது ஏனைய வருமானத்துள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இயந்திரத்தின் மீள்மதிப்பீட்டு குறை ரூ. 800 000 ஆனது இந்த இயந்திரத்தின் முன்னைய மீள்மதிப்பினைக் கருத்திற் கொள்ளாது நடைமுறை வருடத்தின் இலாப கணிப்பீட்டின் போது முற்றாகக் கழிக்கப்பட்டுள்ளது.

[பக். 5 ஐப் பார்க்க

**16.** 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்கான **சரியான** இலாபம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானம்:

| | வருடத்திற்கான இலாபம் (ரூ.' 000) | ஏனைய முற்றுமடங்கிய வருமானம் (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 1 650 | 550 |
| (2) | 1 650 | 1 000 |
| (3) | 2 200 | 550 |
| (4) | 2 650 | 550 |
| (5) | 2 650 | 1 000 |

(......)

**17.** 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான இனங்காணப்பட்ட மொத்த வருமானம், மொத்த செலவுகள்:

| | மொத்த வருமானம் (ரூ.' 000) | மொத்தச் செலவுகள் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 11 150 | 9 400 |
| (2) | 11 150 | 10 200 |
| (3) | 11 600 | 9 400 |
| (4) | 11 600 | 9 750 |
| (5) | 11 600 | 10 200 |

(......)

**18.** சதுசிகன் PLC இல் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

- ரூ. 2 000 000 க்கு இயந்திரமொன்று காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
- ரூ. 3 600 000 கொண்டு செல் தொகையுடைய அலுவலக உபகரணமொன்று ரூ. 600 000 ஆதாயத்தில் காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.
- மோட்டார் வாகனமொன்றின் சொத்துப் பாவனை உரிமையானது 5 வருடங்களுக்கு குத்தகை உடன்படிக்கையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டது. இச்சொத்துப் பாவனை உரிமையின் கிரயம் ரூ. 4 500 000 ஆகும். இக்கிரயமானது ரூ. 1 000 000 ஆரம்பக் கொடுப்பனவை உள்ளடக்கியுள்ளது.

'LKAS 7- காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான **தேறிய** காசு உட்பாய்ச்சல் (காசு வெளிப்பாய்ச்சல்) (ரூ.'000)

(1) 1 100 (2) 1 200 (3) (3 200) (4) (3 500) (5) (4 900) (......)

**19.** 'LKAS 8- கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீடு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்' இன்படி பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - கணக்கீட்டு மதிப்பீடுகளானவை வணிக நடவடிக்கைகளில் உள்ளடங்கியிருக்கும் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக எழுகின்றன.

B - கணக்கீட்டு கொள்கைகள் எப்பொழுதும் அவை தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களில் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டல்களைப் பிரயோகிப்பதன் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

C - கணக்கீட்டு மதிப்பீடுகளின் விளைவானது நடைமுறை காலப்பகுதியின் இலாபம் அல்லது நட்டத்தில், அல்லது நடைமுறை மற்றும் எதிர்கால காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்தில் பொருத்தமான வகையில் சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) A, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

**20.** 'LKAS 37- ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துகள்' இன்படி பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - ஏற்பாடொன்றானது நிச்சயமற்ற காலம் அல்லது தொகையின் பொறுப்பொன்றாகும்.

B - சட்டக் கடப்பாடானது ஒப்பந்தம், சட்டம் அல்லது ஏனைய சட்டச் செயற்பாட்டிலிருந்து ஏற்படும் ஓர் கடப்பாடொன்றாகும்.

C - நிறுவனமொன்று நிகழத்தக்க பொறுப்புகள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்களை அதன் நிதிக்கூற்றுகளில் இனங்காண்பதில்லை.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

**21.** 'SLFRS 16 - குத்தகைகள்' இன்படி பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/சரியானவை?**

A - குத்தகையின் ஆரம்பத் திகதியில், குத்தகைக் கொள்வனவாளன் சொத்துப்பாவனை உரிமையை அதன் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்தல் வேண்டும்.

B - குத்தகையின் ஆரம்பத் திகதியில், குத்தகைக் கொள்வனவாளன் குத்தகைப் பொறுப்பை அத்திகதியில் செலுத்தப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் அளவீடு செய்தல் வேண்டும்.

C - குத்தகையில் உள்ளார்ந்த வட்டி வீதத்தை உடனடியாகத் தீர்மானிக்க முடியுமாயின், அதைப் பயன்படுத்திக் குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியானது கணிக்கப்படுகிறது.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம் (......)

[பக். 6 ஐப் பார்க்க

011022
01030000320111022
CamScanner

22. கயந்தினி PLC இன் 01.04.2023 இலுள்ளவாறான சில மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ.'000 |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம்-ஒவ்வொன்றும் ரூ.100 இல் வழங்கப்பட்ட சாதாரண பங்குகள் | 7 500 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 3 500 |
| செலுத்த வேண்டிய பங்குலாபங்கள் | 600 |

01.04.2023 இல் கம்பனியானது இத்தினத்திலுள்ள ஒவ்வொரு ஐந்து பங்குகளுக்கும் ஒரு பங்கு என்றவாறு பங்கொன்றை ரூ. 120 இல் வழங்கி நிறுத்தி வைத்த வருவாயை மூலதனமாக்கியது. கம்பனியின் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபமானது ரூ. 1 400 000 ஆக இருந்தது. 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியானது 01.04.2023 இலுள்ளவாறு கொடுக்க வேண்டிய பங்குலாபங்களையும் மற்றும் ரூ. 500 000 இடைக்காலப் பங்கிலாபத்தையும் செலுத்தியது. நிறுத்திவைத்த வருவாய்கள் மட்டும் கம்பனியால் பராமரிக்கப்பட்ட ஒரே ஒரு ஒதுக்கமாகும்.
கம்பனியின் 31.03.2024 இலுள்ளவாறான நிறுத்திவைத்த வருவாய்கள் (ரூ.'000):

(1) 2 000 (2) 2 300 (3) 2 600 (4) 2 900 (5) 6 200 (......)

23. 31.03.2024 இல் வணிகமொன்றின் விரைவுச் சொத்து விகிதம் 1:1 ஆக இருந்தது. கம்பனியானது அதன் விரைவுச் சொத்து விகிதத்தினை முன்னேற்றுவதற்குப் பின்வரும் நடவடிக்கைகளைக் கருத்திற் கொள்கின்றது.

A - காப்புறுதிக் கட்டணமொன்றை முற்பணமாக செலுத்துதல்
B - தற்போதுள்ள சரக்கிருப்பினை கடனிற்கு விற்பனை செய்தல்
C - தற்போதுள்ள குறுங்காலப் பொறுப்புக்களைக் கையிலுள்ள காசினைப் பயன்படுத்தி தீர்த்தல்
D - தற்போதுள்ள சரக்கிருப்பினை காசுக்கு விற்பனை செய்தல்

மேற்படி நடவடிக்கைகளுள் எது / எவை வணிகத்தின் விரைவுச் சொத்து விகிதத்தை முன்னேற்றுவதற்கு வழிவகுக்கும்?

(1) B மாத்திரம் (2) D மாத்திரம் (3) B, D மாத்திரம்
(4) A, B, D மாத்திரம் (5) B, C, D மாத்திரம் (......)

24. பின்வரும் நடவடிக்கைகளுள் எவை நிறுவனமொன்றின் முகாமைக் கணக்கீட்டு தொழிற்பாடுகளாக கருத்திற் கொள்ளப்படலாம்?

A - உற்பத்திப் பொருளொன்றின் அல்லது சேவையொன்றின் கிரயத்தினைத் தீர்மானித்தல்
B - செயற்பாட்டு மட்டம் மாறுகின்றபோது கிரய நடத்தையினைப் பகுப்பாய்வு செய்தல்
C - முதலீட்டாளர்களுக்கும் கடன் கொடுத்தோருக்கும் நிதித்தகவல்களை வழங்கல்
D - உற்பத்திப் பொருளொன்றின் கிரயம் - தொகை - இலாபத் தொடர்பினை பகுப்பாய்வு செய்தல்

(1) A, B மாத்திரம் (2) A, B, C மாத்திரம் (3) A, B, D மாத்திரம்
(4) B, C, D மாத்திரம் (5) A, B, C, D ஆகியன எல்லாம் (......)

25. பின்வரும் கூற்றுகளில் எது/எவை நிறுவனமொன்றின் இருப்பு முகாமை தொடர்பில் **சரியானது/சரியானவை?**

A - இருப்பு உருப்படியொன்றின் சிக்கனக் கட்டளைத் தொகையானது அதன் வருடாந்தக் கட்டளைக் கிரயம் மற்றும் வருடாந்த இருப்பு வைத்தற் கிரயங்களின் கூட்டுத்தொகையானது மிகக்குறைவாக இருக்கும் போதுள்ள மறுகட்டளைத் தொகையாகும்.
B - இருப்பு உருப்படியொன்றின் மறுகட்டளை மட்டமானது ஆகக்கூடிய பாவனையை ஆகக்கூடிய விநியோகக் காலத்தினால் பெருக்குவதன் மூலம் கணிக்கப்படும்.
C - இருப்பு உருப்படியொன்றினை அளவீடு செய்வதற்கு குறிப்பிட்டு அடையாளம் காணும் முறையை பயன்படுத்த முடியாதிருக்கும் போது கிரயச் சூத்திரங்கள் பயன்படுத்தப்படும்.

(1) B மாத்திரம் (2) A, B மாத்திரம் (3) A, C மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C ஆகியன எல்லாம் (......)

26. பின்வரும் தகவல்கள் 31.03.2024 இல் முடிவடையும் மாதத்துக்கான கம்பனியொன்றின் சம்பளப் பட்டியலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

| | ரூ.'000 |
|---|---|
| அடிப்படைச் சம்பளங்கள் | 7 500 |
| படிகள் | 2 500 |

**மேலதிக தகவல்கள்:**

- ஊழியர் சேமலாப நிதி (EPF) க்கான தொழில்கொள்வோர் மற்றும் தொழிலாளர் பங்களிப்புகள் முறையே 15%, 10% ஆகும்.
- ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) க்கான தொழில்கொள்வோர் பங்களிப்பு 3% ஆகும்.
- EPF மற்றும் ETF பங்களிப்புகளானது ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது.
- குறித்த மாதமொன்றிற்கான ஊழியர் சேமலாப நிதி EPF மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியானது ETF அடுத்து வரும் மாதத்தில் அனுப்பப்படுகிறது.

31.03.2024 இல் முடிவடையும் மாதத்துக்கான ஊழியர்கள் தொடர்பில் இனங்காணப்பட்ட மொத்தச் செலவுகள் மற்றும் 31.03.2024 இல் உள்ளவாறு இக்கம்பனியின் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி (EPF):

| | ஊழியர்கள் தொடர்பான செலவுகள் (ரூ.' 000) | செலுத்த வேண்டிய EPF (ரூ.' 000) |
|---|---|---|
| (1) | 10 000 | 1 500 |
| (2) | 10 000 | 2 500 |
| (3) | 11 500 | 2 500 |
| (4) | 11 800 | 1 500 |
| (5) | 11 800 | 2 500 |

(......)

[பக். 7 ஐப் பார்க்க

-0002269

CamScanner

● **27, 28 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

ஜெமினி PLC ஆனது தனிப்பொருளொன்றை உற்பத்தி செய்கிறது. கம்பனியின் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு மட்டம் 20 000 அலகுகளாகும். பின்வரும் மதிப்பீடுகள் அடுத்த காலப்பகுதிக்காக தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அலகொன்றுக்கான நேர் மூலப் பொருட்கிரயம் | - 2 கிலோ, கிலோ ஒன்றிற்கு ரூ. 300 படி |
| அலகொன்றுக்கான நேர் ஊழியம் | - 2 மணித்தியாலங்கள், மணித்தியாலமொன்றுக்கு ரூ. 200 படி |
| உற்பத்தி மேந்தலை உறிஞ்சல் விகிதம் | - நேர் ஊழிய மணித்தியாலமொன்றிற்கு ரூ. 300 |
| மொத்த உற்பத்தியில்லா மேந்தலைகள் | - ரூ. 8 000 000 |
| மொத்தக் கிரயத்தில் இலாபம் | - 25% |

**மேலதிக தகவல்கள்:**

50% மான உற்பத்தி மேந்தலைகளும், 75% மான உற்பத்தியில்லா மேந்தலைகளும் மாறும் கிரயங்களாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**27.** அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம் மற்றும் அடுத்த காலப்பகுதிக்கான மொத்த நிலையான கிரயம்:

| | அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம் (ரூ.) | மொத்த நிலையான கிரயம் (ரூ.'000) |
|---|---|---|
| (1) | 1 000 | 6 000 |
| (2) | 1 600 | 2 000 |
| (3) | 1 600 | 8 000 |
| (4) | 2 000 | 6 000 |
| (5) | 2 000 | 8 000 |

(……)

**28.** இவ்வுற்பத்திப் பொருளின் அலகொன்றுக்கான பங்களிப்பு:

(1) ரூ. 500 (2) ரூ. 600 (3) ரூ. 900 (4) ரூ. 1100 (5) ரூ. 1200 (……)

**29.** உற்பத்திக் கம்பனியொன்றின் செயற்பாட்டு மட்டம் 100 000 அலகுகளாகும். பின்வரும் தகவல்கள் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துடன் தொடர்பானவை.

| | (ரூ.'000) |
|---|---|
| விற்பனைகள் | 12 000 |
| மொத்த நிலையான கிரயம் | 3 000 |
| இலாபம் | 2 000 |

கம்பனியின் அலகொன்றுக்கான மாறும் கிரயம் மற்றும் சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்):

| | அலகொன்றுக்கான மாறும் கிரயம் (ரூ.) | சமப்பாட்டுப் புள்ளி (அலகுகள்) |
|---|---|---|
| (1) | 30 | 100 000 |
| (2) | 50 | 40 000 |
| (3) | 50 | 60 000 |
| (4) | 70 | 40 000 |
| (5) | 70 | 60 000 |

(……)

**30.** நிறுவனமொன்று 5 வருட பயன்தரு ஆயுட்காலத்தைக் கொண்ட இயந்திரமொன்றில் முதலீடு செய்யும் செயற்றிட்டமொன்றைக் கவனத்திற் கொள்கின்றது. இவ்வியந்திரத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூ. 1 000 000 ஆகும். இச்செயற்றிட்டத்திலிருந்து வருடாந்த தேறிய காசு உட்பாய்ச்சலாக ரூ. 200 000 எதிர்பார்க்கப்படுகிறது. இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் விகிதம் 10%. இத்திட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV) எதிர்கணியமாக உள்ளது. இச்செயற்றிட்டம் தொடர்பில் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **சரியானது/ சரியானவை?**

A - இச்செயற்றிட்டத்தின் மொத்த எதிர்காலத் தேறிய காசு உட்பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதியானது அதன் ஆரம்ப முதலீட்டைவிடக் குறைவாகவுள்ளது.

B - இச்செயற்றிட்டத்தின் வருடாந்தத் தேறிய காசு உட்பாய்ச்சல்கள் ரூ. 250 000 க்கு அதிகரிக்குமாயின் அதன் திரும்பப் பெறும் காலம் 4 வருடங்களாக இருக்கும்.

C - இச்செயற்றிட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருவாய் விகிதமானது 10% ஐ விட உயர்வாக இருக்கும்போது அதன் NPV நேர்க்கணியமாக இருக்கும்.

(1) A மாத்திரம் (2) A, B மாத்திரம்
(3) A, C மாத்திரம் (4) B, C மாத்திரம்
(5) A, B, C ஆகிய எல்லாம் (……)

[பக். 8 ஐப் பார்க்க

CamScanner

● 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**31.** நிறுவனமொன்றின் பல நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பொதுநோக்குடைய நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்தல்

B - உள்நாட்டு இறைவரித்திணைக்களச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வரிப் பொறுப்பினை மதிப்பிடுதல்

C - கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்குக் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருளைப் பயன்படுத்தல்

D - சந்தை விலைகளின் மாற்றத்தினைக் கருத்திற்கொண்டு கட்டடங்களை மீள்மதிப்பீடு செய்தல்

மேலேயுள்ள ஒவ்வொரு நடவடிக்கையிலும் செல்வாக்குச் செலுத்தும் **மிகவும் பொருத்தமான** சூழல் காரணியை கீழே தரப்பட்டுள்ள உருப்படிகளிலிருந்து தெரிவு செய்க.

| (1) பொருளாதாரம் | (2) சட்டம் | (3) தொழில் தகமை | (4) தொழில்நுட்பம் |
|---|---|---|---|

| **நடவடிக்கை** | **சூழல் காரணி** | **நடவடிக்கை** | **சூழல் காரணி** |
|---|---|---|---|
| A | ........................... | C | ........................... |
| B | ........................... | D | ........................... |

**32.** தனிவியாபாரியொருவரின் நிதிக்கூற்றுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | **31.03.2024 இலுள்ளபடி (ரூ.'000)** | **31.03.2023 இலுள்ளபடி (ரூ.'000)** |
|---|---|---|
| மொத்தச் சொத்துகள் | 800 | 600 |
| மொத்தப் பொறுப்புகள் | 450 | 325 |

**மேலதிக தகவல்கள்:**

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் வணிகத்தின் உரிமையாளர்களுடன் தொடர்புடைய பின்வரும் இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருந்ததுடன் இவைகள் முறையாகப் பதியப்பட்டுள்ளன.

1) உரிமையாளரினால் அவரின் சொந்த நிதியிலிருந்து வணிகத்தின் வியாபாரக் கடன் கொடுத்தோர் ஒருவருக்கு ரூ. 50 000 செலுத்தப்பட்டது.

2) உரிமையாளரால் ரூ. 100 000 கிரயமான பொருட்கள் அவரின் சொந்த பாவனைக்காகப் எடுத்துக்கொள்ளப்பட்டன.

(அ) இவ்வியாபாரத்தின் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் உரிமையாண்மையில் மேற்படி இரண்டு கொடுக்கல் வாங்கல்களும் ஏற்படுத்தும் தாக்கத்தினை ( + அல்லது – ) பெறுமதியுடன் குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்** | **சொத்துக்கள்(ரூ.'000)** | **பொறுப்புகள் (ரூ.'000)** | **உரிமையாண்மை (ரூ.'000)** |
|---|---|---|---|
| 1. | ........................... | ........................... | ........................... |
| 2. | ........................... | ........................... | ........................... |

(ஆ) இவ்வணிகத்தின் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்திற்கான இலாபம் (ரூ.'000): ...........................

● **33, 34 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.**

பின்வரும் நான்கு கொடுக்கல் வாங்கல்களும் தளபாடங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றில் 31.03.2024 இல் முடிவடையும் மாதத்தில் இடம்பெற்றவையாகும்.

A - கஜனிடமிருந்து ரூ. 2 500 000 க்கான பலகைகள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன.

B - பாபு Ltd மிருந்து 'பலகை செய்முறைப்படுத்தும் இயந்திர'மொன்று ரூ. 6 000 000 க்கு கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

C - ரூ. 5 200 000 பட்டியல் விலையுடைய தளபாடங்களானவை ரூ. 200 000 வியாபாரக் கழிவுடன் காசுக்கு விற்கப்பட்டன.

D - கஜனுக்குரிய முழுத் தொகையும் ரூ. 100 000 காசுக் கழிவுடன் தீர்க்கப்பட்டது.

**33.** மேலுள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட மூலப் பதிவேட்டினைக் குறிப்பிடுக.

| **கொடுக்கல் வாங்கல்** | **மூலப்பதிவேடு** | **கொடுக்கல் வாங்கல்** | **மூலப்பதிவேடு** |
|---|---|---|---|
| A | ........................................... | C | ........................................... |
| B | ........................................... | D | ........................................... |

[பக். 9 ஐப் பார்க்க



CamScanner

**34.** மேலுள்ள 'C', 'D' கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக. விளம்பல்கள் தேவையில்லை.

| கொடுக்கல் வாங்கல் | விபரம் | வரவு (ரு.'000) | செலவு (ரு.'000) |
|---|---|---|---|
| C | | | |
| D | | | |

**35.** பின்வரும் பொதுப்பேரேட்டுக் கணக்குகள் ஒவ்வொன்றுக்குமான கணக்கு வகையினைக் குறிப்பிடுக.

| பொதுப்பேரேட்டுக் கணக்கு | கணக்கு வகை |
|---|---|
| A - பெற்ற கழிவு | ........................... |
| B - பற்றுக்கள் | ........................... |
| C - இழப்பீட்டுக்கான ஏற்பாடு | ........................... |
| D - இயந்திரத்தின் திரண்டபெறுமானத்தேய்வு | ........................... |

**36.** **மிகப் பொருத்தமான** கணக்கீட்டு எண்ணக்கருவினைப் பயன்படுத்தி பின்வரும் கூற்றுகளை பூர்த்திசெய்க.

A ................................... எண்ணக்கருவின் பிரகாரம் நிறுவனமொன்றில் ஏற்பட்ட பணப்பெறுமதியுடன் கூடிய கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் கணக்குப் புத்தகங்களில் பதிவு செய்தல் அவசியமாகும்.

B ................................... எண்ணக்கருவானது தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அக்கறையுடைய தரப்பினர்களுக்குப் பயனுள்ள எல்லாத் தகவல்களையும் நிதிக் கூற்றுகளில் அறிக்கையிடுவதற்கு நிறுவனமொன்றை வேண்டுகின்றது.

C ................................... எண்ணக்கருவின் பிரகாரம் நிறுவனமொன்றின் நடைமுறை வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆனால் வருட இறுதியில் விற்பனை செய்யப்படாத பொருட்களின் கிரயமானது விற்பனைக் கிரயக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

D ................................... எண்ணக்கருவின் பிரகாரம் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பயன்தரு ஆயுட்காலத்தையுடையதும் ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமதியுடையதுமான உபகரணங்களின் கிரயமானது நிறுவனமொன்றின் நிதிக் கூற்றுகளில் ஒரு செலவாகக் காட்டப்படுகின்றது.

**37.** விளையாட்டுக்கழகம் ஒன்றில் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்தில் இடம்பெற்ற பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் திரண்ட நிதியின் மீதியில் **அதிகரிப்பை** அல்லது **குறைப்பை** ஏற்படுத்த வழிவகுக்குமா என்பதனை **பெறுமதியுடன்** குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல் | தாக்கம் அதிகரிப்பு - (I) / குறைவு - (D) | பெறுமதி (ரு.'000) |
|---|---|---|
| A - பெறவேண்டிய சந்தா ரு. 20 000 ஆனது நடைமுறை வருடத்தில் பதிவழிக்கப்பட்டுள்ளது. | ..................... | ..................... |
| B - நடைமுறை வருடத்தில் இடம்பெற்ற கிறிக்கெற் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கு விளையாட்டு மைதானத்தை ரு. 250 000 இற்கு வாடகைக்கு கொடுத்துள்ளதுடன் இது தொடர்பில் காசாக ரு. 200 000 பெறப்பட்டுள்ளது. | ..................... | ..................... |

**38.** பொருத்தமான சொற்பதங்களைப் பயன்படுத்தி பங்குடமையுடன் தொடர்பான பின்வரும் கூற்றுகளைப் பூரணப்படுத்துக.

A பங்குடமையொன்றின் மாறும் உரிமையாண்மையானது பங்காளர்களின் ................................... கணக்கில் பதியப்படுகிறது.

B பங்காளர்கள் பங்குடமையிலிருந்து இளைப்பாறும்போது அவர்கள் 1890 பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு ................................... இன்படி தீர்க்கப்படாத மீதியில் வருடாந்தம் 5% வட்டி பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

C பங்குடமை வணிகத்தின் ஆகக்கூடிய பங்காளர்களின் எண்ணிக்கையானது ................................... சட்டத்தின் படி................................... ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

[பக். 10 ஐப் பார்க்க

CamScanner

**39.** அமலனும் விமலனும் பங்குடமையொன்றை எழுத்து மூலமான உடன்படிக்கையின்றி நடாத்தினர். சமிலன் 01.04.2024 இல் ரூ. 1 000 000 காசையும் ரூ. 2 000 000 பெறுமதியான நிலத்தினையும் முதலீடு செய்து பங்குடமையில் சேர்ந்து கொண்டார். இத்தினத்தில் பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 1 200 000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. புதிய பங்குடமையும் எழுத்து மூலமான உடன்படிக்கையின்றி தொடர்ந்து இயங்கியது. பின்வருவனவற்றை பதிவதற்கான நாட்குறிப்பு பதிவுகளை எழுதுக (*விளம்பல் தேவையில்லை*).

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| (அ) பங்குடமையின் மூலதனத்திற்கு சமிலனின் பங்களிப்பு: | | |
| (ஆ) பங்குடமையின் நன்மதிப்பு: | | |

**40.** நிதி அறிக்கையிடலிற்கான எண்ணக்கரு சட்டகம் (2018) இற்கமைய பின்வரும் கூற்றுகளைப் பூரணப்படுத்துக.

A - நிறுவனத்தின் சொத்துக்களிலிருந்து அதன் அனைத்துப் பொறுப்புகளையும் கழித்தபின் வரும் …………………… அக்கறை உரிமையாண்மை ஆகும்.

B - பொறுப்பென்பது கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக …………………… ஒன்றை மாற்றுவதற்கான நிகழ்கால கடப்பாடாகும்.

C - வருமானமென்பது உரிமையாண்மையின் மீது கோரிக்கை கொண்டிருப்பவர்களின் பங்களிப்புக்கள் தவிர்ந்த உரிமையாண்மையின் மீது அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடிய சொத்துக்களின் மீதான …………………… அல்லது பொறுப்புகள் மீதான …………………… ஆகும்.

**41.** 'LKAS 2 - இருப்புகள்' இன்படி பின்வரும் கூற்றுகள் ஒவ்வொன்றும் **உண்மையா (T)** அல்லது **பொய்யா (F)** எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை / பொய் |
|---|---|---|
| A - | கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி இரண்டிலும் எது குறைவோ அப்பெறுமதியில் இருப்புக்களானது அளவீடு செய்யப்படுகின்றது. | …………… |
| B - | தேறிய தேறக்கூடிய பெறுமதியானது சாதாரண வணிகச் செயற்பாட்டில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து மதிப்பிடப்பட்ட பூர்த்தி செய்யும் கிரயம் மற்றும் மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவுகளைக் கழித்துப் பெறப்படுவதாகும். | …………… |
| C - | நிறுவனமொன்றானது ஒரே மாதிரியான இயல்பு மற்றும் பயன்பாட்டினைக் கொண்ட எல்லா இருப்புகளுக்கும் ஒரே கிரயச் சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். | …………… |
| D - | முதல் உள் முதல் வெளி (FIFO) அல்லது நிறையிடப்பட்ட சராசரிக்கிரயம் (WAC) ஆகிய முறைகளுள் எது குறைந்த பெறுமதியைத் தருகின்றதோ அம் முறையினையே இருப்பு உருப்படி ஒன்றின் கிரயத்தை மதிப்பீடு செய்வதில் பயன்படுத்த வேண்டும். | …………… |

**42.** சமந்தா PLC இன் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக்கூற்றுகளை 30.06.2024 இல் வழங்குவதற்கு இயக்குநர்கள் அங்கீகரித்தனர். பின்வரும் நிகழ்வுகள் 31.03.2024 க்குப் பின்னர் கம்பனியில் இடம்பெற்றன.

| இல. | நிகழ்வு |
|---|---|
| 01 | வாடிக்கையாளர் ஒருவரால் ரூ. 1.5 மில்லியன் இழப்பீடொன்றைக் கோரி 10.04.2024 இல் கம்பனிக்கெதிராக வழக்கொன்று தொடுக்கப்பட்டிருந்தது. இவ்விழப்பீட்டைச் செலுத்துமாறு 15.06.2024 இல் நீதிமன்றக் கட்டளை ஒன்று கொடுக்கப்பட்டது. |
| 02 | 31.03.2024 இல் ரூ. 9 மில்லியன் கொண்டுசெல் தொகையுடைய தொழிற்சாலையொன்று 20.04.2024 இல் அழிக்கப்பட்டிருந்தது. |
| 03 | 31.05.2024 இல் வாடிக்கையாளர் ஒருவர் முறிவடைந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளார். 31.03.2024 இல் உள்ளவாறு இவ்வாடிக்கையாளரிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூ. 3 மில்லியனாகும். |

[பக். 11 ஐப் பார்க்க



CamScanner

மேற்படி நிகழ்வுகளை கருத்திற் கொள்வதற்கு முன்னர் 31.03.2024 இல் உள்ளவாறான கம்பனியின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்தப் பொறுப்புகள் முறையே ரூ. 60 மில்லியன் மற்றும் ரூ. 25 மில்லியனாக இருந்தன.

'LKAS 10 - அறிக்கையிடும் காலத்துக்குப் பிந்திய நிகழ்வுகள்' இன்படி பின்வருவனவற்றை அடையாளங்காண்க.

(அ) சீராக்கத் தேவையற்ற நிகழ்வு / நிகழ்வுகள் (இலக்கத்தை / இலக்கங்களை மட்டும் குறிப்பிடுக.)

:.........................

(ஆ) மேற்படி சீராக்கக்கூடிய நிகழ்வை / நிகழ்வுகளைக் கருத்திற் கொண்டதன் பின்னர் 31.03.2024 இல் உள்ளவாறான சரியான மொத்தச் சொத்துக்கள் மற்றும் மொத்தப் பொறுப்புகள்:

மொத்தச் சொத்துக்கள் (ரூ.மில்லியன்) : ......... மொத்தப் பொறுப்புகள் (ரூ.மில்லியன்) : .........

**43.** சதுசிகன் PLC ஆனது 01.04.2021 இல் ரூ. 6 000 000 இற்கு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தது, அதன் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் 5 வருடங்களாகும். கம்பனியானது இயந்திரங்களை வருடாந்தம் குறைந்து செல் மீதி முறையில் 40% பெறுமானத் தேய்விடுகிறது. 01.04.2023 இல் கம்பனியானது இயந்திரத்தின் பெறுமானத் தேய்வு முறையை நேர் கோட்டு முறைக்கு மாற்றியதுடன் அதன் எஞ்சிய பெறுமதி பூச்சியமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 01.04.2021 இல் மதிப்பிடப்பட்ட இயந்திரத்தின் பயன்தரு ஆயுட் காலத்தில் மாற்றம் ஏதுமில்லை.

'LKAS 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்' இன்படி பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

(அ) 31.03.2022 இல் முடிவடைந்த வருடத்திற்கான பெறுமானத்தேய்வுச் செலவுகள் (ரூ.'000) : ..................

(ஆ) 31.03.2023 இலுள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு (ரூ.'000) : ....................................

(இ) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான பெறுமானத்தேய்வுச் செலவுகள் (ரூ.'000): .................

**44.** 'SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பங்களிலிருந்தான வருமானம்' இன்படி பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மையா (T)** அல்லது **பொய்யா (F)** எனக் குறிப்பிடுக.

| | கூற்று | உண்மை / பொய் |
|---|---|---|
| A - | வாடிக்கையாளர் ஒருவருக்கு உறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையை வழங்குவதன் மூலம் செயற்றிறன் கடப்பாட்டினை திருப்தி செய்யும் பொழுது நிறுவனம் வருமானத்தை இனங்காணல் வேண்டும். | ............... |
| B - | பொருட்கள் அல்லது சேவைகளைப் பரிமாற்றம் செய்கையில் நிறுவனம் காசாகப் பெற்றுக் கொண்ட கைம்மாற்றுத் தொகையே கொடுக்கல் வாங்கல் விலையாகும். | ............... |
| C - | ஒப்பந்தமொன்றில் உறுதியளிக்கப்பட்ட கைம்மாறானது நிலையான தொகை, மாறும் தொகை அல்லது இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்கலாம். | ............... |
| D - | செயற்றிறன் கடப்பாடுகளை ஒரு குறிக்கப்பட்ட நேரத்தில் அல்லது ஒரு காலப்பகுதி முழுவதிலும் திருப்தி செய்யலாம். | ............... |

**45.** பின்வரும் தகவல்கள் அமரா PLC இன் 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துடன் தொடர்பானவை.

| | | |
|---|---|---|
| சாதாரண பங்குகளின் எண்ணிக்கை | - | 60 000 |
| பங்கொன்றிற்கான உழைப்பு (ரூ.) | - | 30 |
| மொத்தப் பங்கிலாபம் (ரூ.'000) | - | 300 |
| வருமானவரிச் செலவு (ரூ.'000) | - | 700 |
| வட்டிச் செலவுகள் (ரூ.'000) | - | 500 |

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான பின்வருவனவற்றைக் கணிக்குக:

(அ) பங்கொன்றிற்கான பங்குலாபங்கள் (ரூ.) : ....................................

(ஆ) வரிக்குப் பின்னரான இலாபம் (ரூ.'000) : ....................................

(இ) வட்டிக்காப்பு விகிதம் (தடவைகள்) : ....................................

**46.** பின்வரும் கிரய உருப்படிகள் இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பாகங்களைப் பயன்படுத்தி துவிச்சக்கர வண்டிகளைத் தயாரிக்கும் நிறுவனமொன்றுடன் தொடர்பானவை. அக்கிரய உருப்படிகள் ஒவ்வொன்றையும் 'நேர் அல்லது நேரில்' எனவும் 'மாறும் அல்லது நிலையானது' எனவும் வகைப்படுத்துக.

| கிரய உருப்படி | நேர் (D)/நேரில் (I) | மாறும் (V)/நிலையானது (F) |
|---|---|---|
| A - ரயர், ரியூப்புகளிற்கான கிரயம் | ............................ | ............................ |
| B - தயாரிக்கும் ஊழியர்களின் மாதாந்தக் கூலிகள் | ............................ | ............................ |
| C - தயார் செய்யும் பகுதி மேற்பார்வையாளரின் மாதாந்தச் சம்பளம் | ............................ | ............................ |
| D - கிறீஸ் மற்றும் எண்ணெய்யின் கிரயங்கள் | ............................ | ............................ |

[பக். 12 ஐப் பார்க்க

CamScanner

**47.** உற்பத்தி வணிகமொன்றின் கிரயங்கள் தொடர்பான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **உண்மையா (T)** அல்லது **பொய்யா (F)** எனக் குறிப்பிடுக.

| கூற்று | உண்மை / பொய் |
|---|---|
| A - கிரய உருப்படியுடன் குறிப்பிட்டு அடையாளம் காணக்கூடிய கிரயங்கள் மேந்தலைகளாக்க் காணப்படுகின்றன. | ............... |
| B - நிறுவனமொன்றினால் பயன்படுத்தப்படும் மூலப்பொருள் உருப்படிகளின் தொகையும் பெறுமதியும் களஞ்சிய பேரேட்டில் பதியப்படுகிறது. | ............... |
| C - தொடர்புடைய வீச்சினுள் உற்பத்தி மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பு அல்லது குறைவு காரணமாக நிலையான மேந்தலைகள் மாறுவதில்லை. | ............... |
| D - இயந்திரங்களை இயக்குவோருக்கு வெளியீட்டு அடிப்படையில் செலுத்தப்படும் கூலிகளானது நேர் ஊழியக் கிரயமாக வகைப்படுத்தப்படுகிறது. | ............... |

**48.** கம்பனியொன்று தனிப் பொருள் ஒன்றை உற்பத்தி செய்கிறது. இதற்கு இரண்டு உற்பத்தி கிரய நிலையங்கள் காணப்படுகின்றன. இக்கிரய நிலையங்களுடன் தொடர்புடைய பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் கீழே தரப்படுகிறது.

| | கிரய நிலையம் I | கிரய நிலையம் II |
|---|---|---|
| அலகொன்றிற்கு உறிஞ்சப்பட்ட மேந்தலைகள் | ரூ. 100 | ரூ. 240 |
| செய்முறை நேரம் | 2 நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 3 இயந்திர மணித்தியாலங்கள் |
| நேர் ஊழிய மணித்தியாலங்கள் | 50 000 | — |
| இயந்திர மணித்தியாலங்கள் | — | 20 000 |

கிரய நிலையம் I மற்றும் கிரய நிலையம் II இற்கான மேந்தலை உறிஞ்சல் அடிப்படையானது முறையே நேர் ஊழிய மணித்தியாலங்கள் மற்றும் இயந்திர மணித்தியாலங்கள் ஆகும்.

பின்வருவனவற்றை ஒவ்வொரு கிரய நிலையத்திற்கும் அடையாளங்காண்க.

| | கிரய நிலையம் I | கிரய நிலையம் II |
|---|---|---|
| (அ) மேந்தலை உறிஞ்சல் வீதம் (ரூ.) | ........................ | ........................ |
| (ஆ) மொத்த பாதீடு செய்யப்பட்ட மேந்தலைகள் (ரூ.'000) | ........................ | ........................ |

**49.** ஜெயா PLC ஆனது தனிப் பொருளொன்றை உற்பத்தி செய்யத் திட்டமிடுகிறது. கம்பனியின் மதிப்பிடப்பட்ட செயற்பாட்டு மட்டம் 18 000 அலகுகளாகும். கம்பனியின் எதிர்பார்க்கும் சமப்பாட்டுப் புள்ளி 10 000 அலகுகளாகும். எதிர்பார்க்கும் விற்பனை விலை அலகொன்றுக்கு ரூ. 80 ஆகவும் விற்பனைக்கு பங்களிப்பு விகிதம் 25% ஆகும்.

பின்வருவனவற்றை அடையாளங்காண்க:

(அ) அலகொன்றிற்கான மாறும் கிரயம் (ரூ.) : ..................................

(ஆ) மொத்த நிலையான கிரயம் (ரூ.'000) : ..................................

(இ) 18 000 அலகு செயற்பாட்டு மட்டத்தில் மொத்தக் கிரயம் (ரூ.'000) : ..................................

(ஈ) செயற்பாட்டு மட்டம் 15 000 அலகுகளாக இருப்பின் இலாபம் (ரூ.'000)
: ..................................

**50.** நிறுவனமொன்று ரூ. 5 000 000 கிரயமுடைய சுற்றுச் சூழலுக்கேற்ற இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்கு எண்ணுகிறது. இவ்வியந்திரத்தின் பயன்தரு ஆயுட்காலம், மற்றும் எஞ்சிய பெறுமதி முறையே 10 வருடங்கள் மற்றும் ரூ. 400 000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இயந்திரத்துக்கு நேர்கோட்டு முறை அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது. இந்த இயந்திரத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த தேறிய காசு உட்பாய்ச்சல் ரூ. 625 000 ஆகும்.

இவ்வியந்திரத்துக்கான பின்வருவனவற்றை அடையாளங்காண்க.

(அ) திரும்பப் பெறும் காலம் (வருடங்கள்) : ..................................

(ஆ) கணக்கீட்டு வருவாய் விகிதம் (சராசரி முதலீட்டு அடிப்படையில்) : ..................................

* * *

0002274

CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ගිණුම්කරණය II
கணக்கீடு II
Accounting II

33 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

செய்நிரலாக்கத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

**அறிவுறுத்தல்கள் :**

- ❊ முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ❊ ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- ❊ உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.
- ❊ இவ்வினாத்தாளுக்கு 200 புள்ளிகள் உரித்தாகும்.

**1.** வரையறுத்த சங்கீதன் பொதுக்கம்பனியின் 31.03.2024 இல் உள்ளவாறான சுருக்கிய பரீட்சை மீதியானது கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் .............................. | 80 000 | |
| சொத்துப்பாவனை உரிமை .............................................. | 10 000 | |
| திரண்ட பெறுமானத் தேய்வு - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | | 16 000 |
| - சொத்துப்பாவனை உரிமை ............ | | 500 |
| குத்தகைப் பொறுப்பு .................................................... | | 10 000 |
| விற்பனைகள் ............................................................ | | 98 500 |
| விற்பனைக் கிரயம் ...................................................... | 45 200 | |
| இருப்புக்கள் ............................................................ | 5 600 | |
| ஏனைய வருமானம் ....................................................... | | 2 600 |
| வியாபார வருமதிகள் .................................................... | 3 450 | |
| திறைசேரி உண்டியல்களில் முதலீடு .................................. | 18 000 | |
| காசும் காசுக்குச் சமமானவையும் ...................................... | 3 800 | |
| கூறப்பட்ட மூலதனம் - 01.04.2023 இலுள்ளவாறு சாதாரண பங்குகள் | | 40 000 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் - 01.04.2023 இல் .................. | | 33 200 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - கட்டடங்கள் ............................ | | 6 000 |
| இடைக்காலப் பங்குலாபங்கள்........................................... | 3 000 | |
| நிர்வாகச் செலவுகள் .................................................... | 25 250 | |
| விநியோகக்கிரயம் ...................................................... | 10 750 | |
| நிதிக் கிரயம் ............................................................ | 400 | |
| ஏனைய செலவுகள்........................................................ | 800 | |
| செலுத்திய உத்தரவாதச் செலவுகள் .................................. | 600 | |
| உத்தரவாதத்துக்கான ஏற்பாடு - 01.04.2023 இல் .................. | | 900 |
| செலுத்திய வருமானவரி ................................................ | 1 400 | |
| வருமானவரிக்கான ஏற்பாடு - 01.04.2023 இல் ...................... | | 550 |
| | **208 250** | **208 250** |

[பக். 2 ஐப் பார்க்க

CamScanner

மேலதிக தகவல்கள்:

31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் தகவல்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

(i) கம்பனியானது மொத்தக் கிரயம் அல்லது மொத்த தேறிய தேறக்கூடிய பெறுமதி என்பவற்றுள் குறைவான பெறுமதியில் இருப்புக்களை அளவீடு செய்துள்ளது. 31.03.2024 இல் இருப்புகளின் மொத்தக் கிரயம் மற்றும் மொத்தத் தேறிய தேறக்கூடிய பெறுமதிகளானது முறையே ரூ. 5 600 000, ரூ. 6 200 000 ஆக இருந்தன. எனினும், 31.03.2024 இலுள்ளவாறான ஒரு இருப்பு உருப்படியின் தேறிய தேறக்கூடிய பெறுமதியானது அதன் கிரயத்திலும் பார்க்க ரூ. 450 000 ஆல் குறைவாக இருந்தது.

(ii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள வியாபார வருமதிகள் மீதியானது 31.03.2024 இலுள்ளவாறான வியாபாரக் கொடுக்குமதிகள் மீதி ரூ. 2 550 000 இனை எதிரீடு செய்த பின்னருள்ள மீதியாகும்.

(iii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள காசும் காசிற்குச் சமனானவையும் மூன்று மாத திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள் ரூ. 600 000, ஆறு மாத திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள் ரூ. 1 500 000 ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

(iv) 31.03.2024 இலுள்ளவாறான உத்தரவாதத்திற்கான ஏற்பாடானது ரூ. 1 050 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.

(v) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் பின்வருமாறு:

| விபரம் | கிரயம்/பெறுமதி 31.03.2024 இல் உள்ளவாறு (ரூ.'000) | திரண்ட பெறுமானத் தேய்வு 31.03.2024 இல் உள்ளவாறு (ரூ.'000) | கொள்வனவுத் திகதியில் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலம் (வருடங்கள்) |
|---|---|---|---|
| கட்டடங்கள் | 48 000 | 4 000 | 20 |
| மோட்டார் வாகனங்கள் | 20 000 | 12 000 | 5 |
| அலுவலக உபகரணங்கள் | 12 000 | — | 8 |
| | **80 000** | **16 000** | |

- ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அனைத்தும் நிர்வாக நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இச்சொத்துக்களின் நடைமுறை வருடத்துக்கான பெறுமானத் தேய்வானது சரியாகக் கணிப்பிடப்பட்டுள்ளதுடன் அவை நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகளோ அல்லது அகற்றல்களோ இடம்பெறவில்லை.
- கம்பனி தனது கட்டடங்களை 31.03.2023 இல் முதல் தடவையாக அதன் நியாயப் பெறுமதியான ரூ. 48 000 000 இல் மீள்மதிப்பீடு செய்தது. அதன் விளைவாக ரூ. 7 000 000 மிகை ஏற்பட்டது. இம்மீள் மதிப்பீடானது சரியாகப் பதியப்பட்டுள்ளது.
- 31.03.2024 இல் உள்ளவாறு அலுவலக உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன முறையே ரூ. 16 000 000, ரூ. 3 000 000 ஆக இருந்தது. இத்திகதியில் கம்பனியானது அலுவலக உபகரணங்களை முதல் தடவையாக அதன் நியாயப் பெறுமதியில் ரூ. 12 000 000 ஆக மீள்மதிப்பீடு செய்தது. இதனால் மீள்மதிப்பீட்டுக் குறைவு ஒன்று ஏற்பட்டுள்ளது. இக்குறையானது கட்டட மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(vi) 01.04.2023 இல் கம்பனியானது 5 வருட காலப்பகுதிக்கு கட்டடமொன்றின் சொத்துப்பாவனை உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான குத்தகை உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளது. இத்திகதியில் சொத்துப்பாவனை உரிமையின் கிரயம் மற்றும் ஆரம்பக் குத்தகைப் பொறுப்பு ரூ. 10 000 000 ஆனது சரியாகப் பதியப்பட்டுள்ளது. குத்தகை உடன்படிக்கையின்படி ஒவ்வொன்றும் ரூ. 3 200 000 ஆன 5 சமமான வருடாந்தக் குத்தகைக் கட்டணங்களை 31.03.2024 இலிருந்து ஆரம்பித்துக் குத்தகைக் காலத்தில் செலுத்த வேண்டும். முதலாவது தவணைக் கட்டணமானது 31.03.2024 இல் செலுத்தப்பட்டதுடன் அது நிர்வாகச் செலவாகப் பதியப்பட்டுள்ளது. இத்தவணைக் கட்டணக் கொடுப்பனவு தொடர்பில் வேறு கணக்கீட்டுப்பதிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 31.03.2024 மற்றும் 31.03.2025 இல் முடிவடையும் வருடங்களுக்கான குத்தகை வட்டியானது முறையே ரூ 1 800 000, ரூ. 1 548 000 ஆகும். இக்கட்டடத்தை குத்தகைக் கால முடிவில் குத்தகையை வழங்கியவருக்கு ஒப்படைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இச்சொத்துப்பாவனை உரிமையானது அதன் பயன்தரு ஆயுட்கால அடிப்படையில் 20 வருடங்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன் இப் பெறுமானத்தேய்வானது நிர்வாகச் செலவுகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(vii) பரீட்சை மீதியில் காட்டப்பட்டுள்ள செலுத்திய வருமானவரியானது கடந்த வருடத்துக்காகச் செலுத்தப்பட்ட ரூ. 600 000 வரியையும், நடைமுறை வருடத்தின் முதல் மூன்று காலாண்டுகளுக்குச் செலுத்திய வரியையும் உள்ளடக்கியுள்ளது. 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான மொத்த வருமானவரிப் பொறுப்பு ரூ. 1 100 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது.

[பக். 3 ஐப் பார்க்க

CamScanner

(viii) 01.04.2023 இல் உள்ளவாறான கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனமானது பங்கொன்று ரூ. 10 படி வழங்கப்பட்ட 4 000 000 பங்குகளை உள்ளடக்கியுள்ளது. இக்கம்பனியானது இத்திகதியிலுள்ள ஒவ்வொரு 5 பங்குகளுக்கும் 1 பங்கு என்றவாறு பங்கொன்றை ரூ. 12 விலையில் வழங்கி நிறுத்திவைத்த வருவாய்களை மூலதனமாக்கியது. இது தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் எதுவித சீராக்கமும் மேற்கொள்ளப்படவில்லை.

**வேண்டப்படுவது:**

'LKAS 1 - நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்' இன்படி பிரசுர நோக்கத்துக்கான சங்கீதன் PLC இன் பின்வரும் நிதிக்கூற்றுக்கள் (குறிப்புக்கள் உட்பட):

(1) 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முற்றுமடங்கிய வருமானக் கூற்று

(2) 31.03.2024 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று

(3) 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான உரிமையாண்மை மாற்றல் கூற்று

(மொத்தம் 40 புள்ளிகள்)

2\. (அ) உற்பத்தி நிறுவனமொன்றான அமரன் PLC இற்கு வருடாந்தம் மூலப்பொருள் உருப்படியொன்றின் 10 000 அலகுகள் தேவைப்படுகிறது. இம்மூலப்பொருளின் அலகொன்றுக்கான கொள்வனவு விலையானது ரூ. 2 000 ஆகும். இம்மூலப்பொருளின் கட்டளை ஒன்றிற்கான கட்டளை கிரயம் ரூ. 5 000 ஆகும். இம்மூலப்பொருளின் அலகொன்றிற்கான வருடாந்த இருப்பு வைத்தற் கிரயமானது அதன் கொள்வனவு விலையில் 20% ஆகும். இம்மூலப்பொருளின் ஆகக்கூடிய இருப்பு மட்டம் மற்றும் ஆகக்குறைந்த இருப்பு மட்டம் ஆகியன முறையே 700 அலகுகள், 200 அலகுகள் ஆகும். இம்மூலப்பொருளின் மறு கட்டளை மட்டம் 600 அலகுகளாகவும் அதன் சராசரி விநியோகக் காலம் 2 கிழமைகளாகவும் உள்ளன.

**வேண்டப்படுவது:**

(1) சிக்கனக் கட்டளைத் தொகை (2) வருடமொன்றிற்கான கட்டளைகளின் எண்ணிக்கை

(3) சராசரி இருப்பு மட்டம் (4) கிழமையொன்றிற்கான சராசரிப் பாவனை (10 புள்ளிகள்)

(ஆ) நொறீன் PLC ஆனது 'A' மற்றும் 'B' எனும் இரண்டு வகையான பொருட்களை உற்பத்தி செய்கிறது. இக்கம்பனியானது 'ஒன்றிணைத்தல்' மற்றும் 'முடிவுறுத்தல்' எனும் இரண்டு உற்பத்தித் திணைக்களங்களையும் சேவைத்திணைக்களமான 'களஞ்சியத்தையும்' கொண்டுள்ளது.

இக்கம்பனியின் கணக்கீட்டு உதவியாளர் அடுத்த வருடத்திற்கான பின்வரும் மேந்தலை உறிஞ்சல் வீதங்களை 3 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் கணிப்பிட்டுள்ளார். (இச் செயற்பாட்டு மட்டமானது உற்பத்திப் பொருள் 'A' இன் 2 000 அலகுகளையும் உற்பத்திப் பொருள் 'B' இன் 1 000 அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது.)

- ஒன்றிணைத்தல் திணைக்களம் - இயந்திர மணித்தியாலமொன்றிற்கு ரூ. 20
- முடிவுறுத்தல் திணைக்களம் - நேர் ஊழிய மணித்தியாலமொன்றிற்கு ரூ. 30

இதனைத் தொடர்ந்து, இந்த மேந்தலை உறிஞ்சல் வீதங்களைக் கணிக்கும்போது கணக்கீட்டு உதவியாளரால் பின்வரும் வழுக்கள் விடப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

- ஒன்றிணைத்தல் திணைக்களத்திற்கான பாதீடிடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களத்தின் பாதீடிடப்பட்ட நேர் ஊழிய மணித்தியாலங்கள் தவறுதலாக முறையே 65 000 மற்றும் 35 000 ஆக பயன்படுத்தப்பட்டுள்ளது.
- மொத்த உற்பத்தியல்லா மேந்தலைகள் ரூ. 720 000 ஆனது ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களுக்கிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.
- களஞ்சியத்தின் சரியான மொத்த மேந்தலைகள் ரூ. 210 000 ஆக இருந்தபோதும் இது தவறுதலாக ரூ. 150 000 என கணிக்கப்பட்டு ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களுக்கிடையே முறையே 2:1 என்னும் சரியான விகிதத்தில் மீள் பகிர்வு செய்யப்பட்டுள்ளது.
- மேலும், பின்வரும் உற்பத்தி மேந்தலைகள் கருத்திற்கொள்ளப்படவில்லை.

| | (ரூ.) |
|---|---|
| நேரில் கூலிகள் - ஒன்றிணைத்தல் திணைக்களம் | 340 000 |
| - முடிவுறுத்தல் திணைக்களம் | 80 000 |
| ஒன்றிணைத்தல் திணைக்களத்தில் பயன்படுத்திய விசேட உபகரணத்திற்கான வாடகை | 420 000 |
| இயந்திரங்களிற்கான காப்புறுதிக் கட்டணம் | 170 000 |
| உற்பத்தித் திணைக்களங்களுக்கான மின்சாரம் | 100 000 |
| உற்பத்தித் திணைக்களங்களுக்கான ஊழியர் நலன்புரி | 400 000 |

**மேலதிக தகவல்கள்:**

- இயந்திரங்களிற்கான காப்புறுதிக் கட்டணமானது ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களுடன் மட்டும் தொடர்புடையதாகும். ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களின் இயந்திரங்களின் பெறுமதிகள் முறையே ரூ. 16 மில்லியன், ரூ. 18 மில்லியனாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

CamScanner

- ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களின் பாதீடுடப்பட்ட கிலோ வாற்ஸ் மணித்தியாலங்கள் முறையே 8 000, 2 000 ஆகும்.
- ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையானது முறையே 60, 20 ஆகும்.
- சரியான பாதீடுடப்பட்ட இயந்திர மணித்தியாலங்கள் மற்றும் பாதீடுடப்பட்ட நேர்ஊழிய மணித்தியாலங்கள் முறையே 40 000, 20 000 ஆகும்.
- உற்பத்தித் திணைக்களங்களின் செய்முறை நேரமானது பின்வருமாறு:

| | உற்பத்திப் பொருள் A | உற்பத்திப் பொருள் B |
|---|---|---|
| ஒன்றிணைத்தல் திணைக்களம் (இயந்திர மணித்தியாலங்கள்) | 2 | 3 |
| முடிவுறுத்தல் திணைக்களம் (நேர் ஊழிய மணித்தியாலங்கள்) | 3 | 4 |

- உற்பத்திப்பொருள் 'A' மற்றும் உற்பத்திப்பொருள் 'B' இன் அலகொன்றிற்கான மூலக்கிரயம் முறையே ரூ. 240, ரூ. 235 ஆகும்.
- கம்பனியானது உற்பத்திக் கிரயத்தில் 40% இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்கிறது.

**வேண்டப்படுவது:**

(1) பகிர்வு அடிப்படையைத் தெளிவாகக் காட்டக்கூடியவாறு திருத்திய மேந்தலைப் பகுப்பாய்வு அட்டவணை

(2) ஒன்றிணைத்தல் மற்றும் முடிவுறுத்தல் திணைக்களங்களுக்கான திருத்திய மேந்தலை உறிஞ்சல் வீதங்கள்

(3) உற்பத்திப் பொருள் 'A' மற்றும் உற்பத்திப் பொருள் 'B' இன் அலகொன்றுக்கான உற்பத்திக் கிரயம்

(4) 3 000 அலகுகள் செயற்பாட்டு மட்டத்தில் மொத்த உற்பத்திக் கிரயம் மற்றும் விற்பனைப் பெறுமதி

**(30 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

3. (அ) 'டில்சான்' வணிகமானது விசேட வகையான கணினிகளை விற்பனை செய்யும் நிறுவனமொன்றாகும். இந்நிறுவனமானது பெறுமதிசேர் வரி (VAT) க்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 01.10.2024 இல் உள்ளவாறான பின்வரும் மீதிகள் இவ்வணிகத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

| | (ரூ.'000) |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 324 |
| இருப்பு (2 கணினிகள்) கிரயத்தில் | 250 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 126 |
| காசு | 120 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **820** |
| உரிமையாண்மை | 610 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 150 |
| VAT கட்டுப்பாட்டு - செலவு மீதி | 60 |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | **820** |

வணிகத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களானது 2024 ஒக்டோபர் மாதத்தில் இடம்பெற்றுள்ளன.

| இல. | கொடுக்கல் வாங்கல் |
|---|---|
| 1 | உரிமையாளர் வணிகத்துக்கு மேலதிக மூலதனமாக ரூ. 120 000 காசை வழங்கினார். |
| 2 | பெறப்பட்ட ஏனைய வருமானம் ரூ. 20 000 ஆகும். |
| 3 | ஆரம்ப இருப்பிலுள்ள இரண்டு கணினிகளும் ஒவ்வொன்றும் ரூ. 295 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டன (கணினி ஒன்றிற்கான VAT ரூ. 45 000 உட்பட). |
| 4 | 10% காசுக் கழிவினைப் பெற்ற பின்னர் ஆரம்ப வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு ரூ. 135 000 செலுத்தப்பட்டது. |
| 5 | ஒவ்வொன்றும் ரூ. 118 000 ஆன மூன்று கணினிகள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன (ஒவ்வொரு கணினிக்குமான VAT ரூ. 18 000 உட்பட). |
| 6 | இருப்பிலுள்ள ரூ. 100 000 கிரயமான கணினியொன்று உரிமையாளரால் அவரது தனிப்பட்ட பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. |
| 7 | இருப்பிலுள்ள ரூ. 100 000 கிரயமான கணினியொன்று அலுவலகப் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. |
| 8 | கணினி ஒன்று ரூ. 177 000 காசுக்கு விற்பனை செய்யப்பட்டது (VAT ரூ. 27 000 உட்பட). இக்கணினியின் கிரயம் ரூ. 100 000 ஆகும். |

[பக். 5 ஐப் பார்க்க

CamScanner

9 செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 80 000 ஆகும்.

10 ரூ. 6 000 காசுக் கழிவு அனுமதிக்கப்பட்ட பின்னர் ஆரம்ப வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து ரூ. 120 000 பெறப்பட்டது.

11 ஒவ்வொன்றும் ரூ. 147 500 ஆன இரண்டு கணினிகள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. (கணினி ஒன்றிற்கான VAT ரூ. 22 500 உட்பட).

12 31.10.2024 இல் உள்ளவாறான இறுதியிருப்பானது அதன் தேறிய தேறக்கூடிய பெறுமதியில் ரூ. 200 000 ஆக அளவீடு செய்யப்பட்டது. இவ்விருப்பின் கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடானது செலவொன்றாக இனங்காணப்பட்டது.

**வேண்டப்படுவது:**

(1) கணக்கீட்டுச் சமன்பாட்டைப் பயன்படுத்தி 01.10.2024 இலுள்ளவாறான மீதிகளைப் பதிவுசெய்வதுடன் 1 தொடக்கம் 12 வரையான கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினை (பெறுமதியுடன்) காட்டுக. பெறுமதி அதிகரிக்குமாயின் (+) எனவும் குறைவடையுமாயின் (−) எனவும் ஒவ்வொரு பெறுமதியிக்கும் முன்னே குறிப்பிடுக. விற்பனைகள் மற்றும் கொள்வனவுகள் ஆகிய இரண்டுடனும் தொடர்புடைய VAT ஆனது கணிக்கீட்டுச் சமன்பாட்டிலுள்ள VAT கட்டுப்பாட்டு நிரலில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். (இவ்வினாவுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள மாதிரியைப் பயன்படுத்துக).

(ரூ. '000)

| மீதி / கொடுக்கல் வாங்கல் இல. | சொத்துக்கள் | | | | = பொறுப்புக்கள் | + | உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | இருப்பு | வியாபாரக் கடன் பட்டோர் | காசு | வியாபாரக் கடன் கொடுத்தோர் | VAT கட்டுப்பாடு | |
| 01.10.2024 இல் மீதி | | | | | | | |
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |
| ---- | | | | | | | |
| ---- | | | | | | | |
| 31.10.2024 இல் மீதி | | | | | | | |

(2) 31.10.2024 இல் முடிவடையும் மாதத்துக்கான மொத்த இலாபக் கணிப்பீட்டுக்கான கூற்று

**(30 புள்ளிகள்)**

(ஆ) நலன்புரிச் சங்கமொன்று 01.04.2023 இல் 200 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தவர் ஒருவரின் வருடச் சந்தா ரூ. 12 000 ஆகும். பின்வரும் தகவல்கள் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான நலன்புரிச் சங்கத்துடன் தொடர்புடையனவானவாகும்.

ஆயுள் அங்கத்துவம்:

- நலன்புரிச் சங்கமானது 01.04.2023 இல் ஆயுள் அங்கத்துவத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஆயுள் அங்கத்துக் கட்டணமானது 5 வருடங்களுக்கான வருடச் சந்தாவுக்குச் சமனானதாகும். இத்தொகையானது ஆயுள் அங்கத்துவம் பெறப்படும் திகதியில் ஒரே தடவையில் செலுத்துதல் வேண்டும்.
- ஆயுள் அங்கத்துவக் கட்டணத்தை அது பெறப்படும் வருடத்திலிருந்து சமமான தொகையை 10 வருடங்களுக்கு வருமானமாக இனங்கான்பது கம்பனியின் கொள்கையாகும்.
- தற்போதுள்ள 50 அங்கத்தவர்களும், 10 புதிய அங்கத்தவர்களும் உரிய தொகையினைச் செலுத்தி 01.04.2023 இல் ஆயுள் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

வருடச் சந்தா:

- முற்பணமாகப் பெறப்பட்ட சந்தா அல்லது நிலுவையாகவுள்ள சந்தா என எதுவும் 01.04.2023 இல் இருக்கவில்லை.
- இவ்வருடத்தில் 10 புதிய ஆயுள் அங்கத்தவர்களைத் தவிர புதிய அங்கத்தவர்கள் எவரும் இச்சங்கத்தில் இணைந்துகொள்ளவில்லை.
- 140 அங்கத்தவர்கள் நடைமுறை வருடத்துக்கான வருடச் சந்தாவைச் செலுத்தினர். இவர்களுள் 15 அங்கத்தவர்கள் அடுத்த வருடத்துக்கான வருடச் சந்தாவையும் செலுத்தினர்.
- மீதியாகவுள்ள 10 அங்கத்தவர்கள் நடைமுறை வருடத்துக்கான வருடச் சந்தாவைச் செலுத்தவில்லை.

[பக். 6 ஐப் பார்க்க

CamScanner

நன்கொடைகள்:

- இந்நலன்புரிச் சங்கமானது விளையாட்டு நிலையம் ஒன்றைக் கட்டுவதற்கு 01.07.2023 இல் ரூ. 1 000 000 ஐ நன்கொடையாகப் பெற்றுள்ளது. இந்நன்கொடையிலிருந்து 01.10.2023 இல் விளையாட்டு நிலைய வடிவமைப்புக்காக ரூ. 100 000 செலுத்தப்பட்டது. இவ்விளையாட்டு நிலைய கட்டுமான வேலைகள் 01.01.2024 இல் ஆரம்பிக்கப்பட்டது. 31.03.2024 இலுள்ளவாறு அத்திகதி வரை செய்துமுடிக்கப்பட்ட வேலைக்காக ஒப்பந்ததாரருக்கு ரூ. 400 000 செலுத்த வேண்டியுள்ளது.
- வருடமொன்றில் பயன்படுத்தப்படும் நன்கொடை தொகையின் அடிப்படையில் அவைகள் அந்தந்த வருட வருமானமாக இனங்காண்பது இச்சங்கத்தின் கொள்கையாகும்.

**வேண்டப்படுவது:**

நலன்புரிச் சங்கத்தின் 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான பின்வரும் கணக்குகள்:

(1) ஆயுள் அங்கத்துவ நிதிக் கணக்கு

(2) சந்தாக் கணக்கு

(3) நன்கொடை நிதிக் கணக்கு

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

4. (அ) வரையறுத்த அமரன் தனியார் கம்பனியானது வியாபாரமொன்றை நடத்துகின்றது. இக்கம்பனியானது பொருட்களை கடன் அடிப்படையில் மட்டும் கொள்வனவு செய்வதுடன் பொருட்களை கடன் அடிப்படையிலும் காசுக்கும் விற்பனை செய்கிறது. இக்கம்பனியானது பெறுமதி சேர்வரி (VAT) இக்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

01.01.2024 இலுள்ளவாறான சில பொதுப் பேரேட்டு கணக்கு மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | (ரூ.'000) |
|---|---|
| காசுக்கணக்கு | 80 |
| வியாபாரக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 295 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 118 |
| VAT கட்டுப்பாட்டுக் கணக்கு - செலவு மீதி | 27 |

இக்கம்பனியில் 2024 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

(i) இம்மாதத்தில் இடம்பெற்ற விற்பனைகள்:

| | தொகை (ரூ.'000) | விற்பனைகளில் உள்ளடங்கியுள்ள VAT (ரூ.'000) |
|---|---|---|
| கடன் விற்பனைகள்: | | |
| – விமல் ரேடர்ஸ் | 708 | 108 |
| – கெவின் லிமிட்டட் | 472 | 72 |
| காசு விற்பனைகள் | 236 | 36 |

(ii) இம்மாதத்தில் இடம்பெற்ற கொள்வனவுகள்:

| | தொகை (ரூ.'000) | கொள்வனவுகளில் உள்ளடங்கியுள்ள VAT (ரூ.'000) |
|---|---|---|
| அசோகா லிமிட்டட் | 826 | 126 |
| சமந்தி ரேடர்ஸ் | 590 | 90 |

(iii) இம்மாதத்தில் இடம்பெற்ற காசுப் பெறுவனவுகளும் காசுக் கொடுப்பனவுகளும்:

| | தொகை(ரூ.'000) |
|---|---|
| காசுப் பெறுவனவுகள்: | |
| – ஆரம்ப வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து | 295 |
| – விமல் ரேடர்ஸிடமிருந்து (ரூ. 25 000 காசுக் கழிவு அனுமதித்த பின்னர்) | 683 |
| – காசு விற்பனையிலிருந்து | 236 |
| காசுக் கொடுப்பனவுகள்: | |
| – ஆரம்ப வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு | 118 |
| – ஆரம்ப VAT கொடுக்குமதி | 27 |
| – அசோகா லிமிட்டடுக்கு (ரூ. 30 000 காசுக் கழிவு பெற்ற பின்னர்) | 796 |
| – செயற்பாட்டுச் செலவுகள் | 500 |

**வேண்டப்படுவது:**

(1) 2024 ஜனவரி மாதத்துக்கான பின்வரும் மூலப்பதிவேடுகள்:

(i) காசுப் பெறுவனவு நாளேடு
(ii) காசுக் கொடுப்பனவு நாளேடு
(iii) விற்பனை நாளேடு
(iv) கொள்வனவு நாளேடு

(2) மேற்படி மூலப்பதிவேடுகளின் மொத்தங்களை பேரேட்டுக்கு மாற்றுவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள் விளம்பலுடன்.

**(20 புள்ளிகள்)**

[பக். 7 ஐப் பார்க்க

CamScanner

(ஆ) சரண்யா PLC இன் நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| **31.03.2024 இல் முடிவடைந்த வருடத்திற்காக:** | **ரூ. '000** |
|---|---|
| விற்பனைகள் | 2 000 |
| விற்பனைக் கிரயம் | 1 200 |
| வட்டிச் செலவுகள் | 30 |
| வருடத்திற்கான வருமானவரி | 70 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 180 |

| **31.03.2024 இலுள்ளபடி:** | **ரூ. '000** |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 520 |
| இருப்பு | 150 |
| வியாபார வருமதிகள் | 200 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | 80 |
| சாதாரண பங்கு மூலதனம் | 300 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் | 200 |
| 12% தொகுதிக் கடன்கள் | 250 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 200 |

**மேலதிக தகவல்கள்:**

- 01.04.2023 இலுள்ளவாறான இருப்பு ரூ. 250 000 ஆகும்.
- 01.04.2023 இலுள்ளவாறான வியாபார வருமதிகள் ரூ. 300 000 ஆகும்.
- அனைத்து விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.
- வருடமொன்றில் 360 வேலை நாட்கள் உள்ளன எனக் கருதுக.

**வேண்டப்படுவது:**

31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான பின்வரும் விகிதங்கள்:

(1) மொத்த இலாப விகிதம்

(2) தேறிய இலாப விகிதம்

(3) இருப்பு புரள்வு விகிதம்

(4) விரைவுச் சொத்து விகிதம்

(5) உரிமையாண்மை மீதான திரும்பல் விகிதம்

(6) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்

(7) கடன் விகிதம்

**(10 புள்ளிகள்)**

(இ) கம்பனியொன்று ரூ. 2 500 000 கிரயமுள்ள இயந்திரமொன்றை கொள்வனவு செய்வதற்கான செயற்றிட்டமொன்றைக் கவனத்தில் கொள்கிறது. இந்த இயந்திரத்தை 5 வருடங்களுக்கு பயன்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 5 ஆம் வருட இறுதியில் இந்த இயந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட எஞ்சிய பெறுமதி ரூ. 500 000 ஆகும்.

மதிப்பிடப்பட்ட விற்பனை (அலகுகளில்) பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| விற்பனை (அலகுகள்) | 7 000 | 8 000 | 9 000 | 6 500 | 4 000 |

அலகொன்றிற்கான விற்பனை விலை ரூ. 500 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. விற்பனை விலையானது 4 ஆம், 5 ஆம் வருடங்களில் முறையே ரூ. 600, ரூ. 750 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருடாந்த பெறுமானத் நேரச் செயற்பாட்டுக் கிரயமானது விற்பனை வருமானத்தின் 50% ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. பெறுமானத் தேய்வு உட்பட வருடாந்த நேரில் கிரயமானது ரூ. 1 100 000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. கம்பனியானது இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடுகிறது.

முதலீட்டின் மீதான தேவைப்படும் திரும்பல் விகிதம் 10% ஆகும். இதன் கழிவீட்டுக் காரணிகள் பின்வருமாறு:

| வருடம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவீட்டுக் காரணி (கிட்டிய இரண்டு தசமதானத்தில்) | 0.91 | 0.83 | 0.75 | 0.68 | 0.62 |

**வேண்டப்படுவது:**

(1) செயற்றிட்டத்தின் ஒவ்வொரு காசுப்பாய்ச்சல் உருப்படியையும் தனித்தனியாக காட்டக்கூடியவாறு மதிப்பிடப்பட்ட வருடாந்த காசு உள்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்கள்

(2) செயற்றிட்டத்தின் தேறிய நிகழ்காலப் பெறுமதி (NPV)

(3) தேறிய நிகழ்காலப் பெறுமதியடிப்படையில் இச்செயற்றிடத்தில் முதலிடுவதற்கான சிபார்சு

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

[பக். 8 ஐப் பார்க்க

5. (அ) லவனும் பிரியனும் வணிகமொன்றின் பங்காளர்களாவர். பங்குடமை உடன்படிக்கையின் நிபந்தனைகள் பின்வருமாறு:

- பங்காளர்கள் இலாப, நட்டங்களை சமமாகப் பகிர்வதற்கு உரித்துடையவர்கள்.
- ஒவ்வொரு பங்காளரும் ஆரம்ப மூலதன மீதியில் வருடமொன்றுக்கு 10% வட்டிக்கு உரித்துடையவர்.
- ஒவ்வொரு பங்காளரும் ரூ. 100 000 மாதாந்தச் சம்பளத்துக்கு உரித்துடையவர்.
- பங்காளர்கள் பங்குடமைக்கு வழங்கிய கடன்கள் மீது வருடமொன்றுக்கு 10% வட்டியைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

பங்குடமையின் 31.03.2024 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ.'000) | செலவு (ரூ.'000) |
|---|---|---|
| விற்பனைகள் | | 15 400 |
| விற்பனைக்கிரயம் | 6 000 | |
| இருப்பு (பௌதிக இருப்பு அடிப்படையில்) | 700 | |
| நிர்வாகச் செலவுகள் | 3 800 | |
| விநியோகச் செலவுகள் | 2 200 | |
| ஏனைய செலவுகள் | 600 | |
| ஆதனம், பொறி, உபகரணங்கள் - கொண்டு செல் தொகை | 8 000 | |
| காசு | 2 500 | |
| கடன் - லவன் | | 1 000 |
| மூலதனக் கணக்குகள் - 01.04.2023 இல்: | | |
| லவன் | | 4 000 |
| பிரியன் | | 2 000 |
| நடைமுறைக் கணக்குகள் - 01.04.2023 இல்: | | |
| லவன் | | 700 |
| பிரியன் | | 100 |
| தொங்கல் கணக்கு | | 600 |
| | **23 800** | **23 800** |

**மேலதிக தகவல்கள்:**

(i) பங்குடமையின் முகாமையாளரான கமலன் என்பவர் 31.03.2024 இலிருந்து ஒரு பங்காளராக அனுமதிக்கப்பட்டுள்ளார். பங்காளர் புதிய பங்குடமையிலும் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்வதற்கு இணங்கினர். இத்திகதியில், பங்குடமையின் நன்மதிப்பானது ரூ. 2 400 000 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நன்மதிப்பானது கணக்குகளில் பதியப்படவில்லை.

(ii) தொழில் ஒப்பந்தத்தின் பிரகாரம் ரூ. 1 000 000 வருடாந்த மிகையூதியமொன்றைப் பெறுவதற்கு கமலன் உரித்துடையவராக இருந்தார். நடைமுறை வருடத்துக்கான மிகையூதியமானது செலுத்தப்படவோ அல்லது கணக்குப் புத்தகங்களில் பதிவுசெய்யப்படவோ இல்லை. இம்மிகையூதியத்தைக் கமலனின் மூலதனமாக்குவதற்கு எல்லாப் பங்காளரும் இணங்கியுள்ளனர்.

(iii) நடைமுறை வருடத்திற்கான பங்காளரின் மூலதன மீதிகள் மீதான வட்டியானது ஏனைய செலவுகளில் வரவு வைக்கப்பட்டும் தொங்கல் கணக்கில் செலவு வைக்கப்பட்டும் இருந்தது.

(iv) இவ்வருடத்தில் லவன் ஆறு மாதங்களுக்கான சம்பளத்தைக் காசாக எடுத்திருந்தார். மேலும் பிரியன் நடைமுறை வருடத்துக்கான முழுச் சம்பளங்களையும், 2024 ஏப்ரல் மாதத்துக்கான சம்பளத்தையும் இவ்வருடத்தில் காசாக எடுத்திருந்தார். பங்காளரால் காசாக எடுக்கப்பட்ட மொத்தச் சம்பளங்கள் நிர்வாகச் செலவுகளுக்கு பதியப்பட்டுள்ளது.

(v) லவனால் வழங்கப்பட்ட கடனுக்கான நடைமுறை வருடத்துக்கான வட்டியானது செலுத்தப்படவோ அல்லது பதியப்படவோ இல்லை.

(vi) இவ்வருடத்தில் லவனும், பிரியனும் பங்குடமையிலிருந்து முறையே ரூ. 300 000, ரூ. 200 000 கிரயமான பொருட்களைத் தமது சொந்தப் பாவனைக்காக எடுத்திருந்தனர். இது தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் சீராக்கமெதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(vii) இவ்வருடத்தில் கமலன் ரூ. 100 000 கிரயமான பொருட்களைத் தனது சொந்தப் பாவனைக்காக எடுத்திருந்தார். இது தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் சீராக்கம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கமலனால் எடுத்துக்கொள்ளப்பட்ட பொருட்களை அவர் பங்காளனாவதற்கு அனுமதிக்கப்பட்ட போது அவற்றை பங்குடமையால் அவருக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பாகக் கொள்வதற்கு ஏனைய பங்காளர்கள் இணங்கியிருந்தனர்.

**வேண்டப்படுவது:**

(1) 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமையின் வருமானக்கூற்று (பங்காளர்களுக்கான பகிர்வுகள் உட்பட).

(2) 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் மற்றும் நடைமுறைக் கணக்குகள்.

**(30 புள்ளிகள்)**

[பக். 9 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki'
CamScanner

(ஆ) கஜானன் என்பவர் ஆலோசனைச் சேவை வணிகமொன்றை நடாத்திவருகின்றார். இவ்வணிகத்தின் எல்லாக் காசுக் கொடுக்கல் வாங்கல்களும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. வணிகத்தின் 31.12.2023 இல் உள்ளவாறு காசுக்கணக்கின் வரவு மீதி ரூ. 35 800 ஆக இருந்தது. எனினும், இத்திகதியில் வங்கிக்கூற்று மீதியானது காசுக்கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. வங்கிக் கூற்றானது 03.01.2024 இல் பெறப்பட்டிருந்தது.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின்போது பின்வரும் காரணங்களால் இவ்வேறுபாடு ஏற்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

- 15.12.2023 இல் ரூ. 60 000 ஆலோசனை வருமானமொன்று வங்கிக்கு நேரடியாக அனுப்பப்பட்டது.
- 20.12.2023 இல் அலுவலகக் கட்டடக் காப்புறுதிக்கான ரூ. 25 000 நிலையான கட்டளைக் கொடுப்பனவொன்றை வங்கி செலுத்தியது.
- 27.12.2023 இல் வாடகைக் கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட ரூ. 80 000 காசோலையொன்று காசுக்கொடுப்பனவு நாளேட்டில் இரு தடவைகள் பதியப்பட்டது.
- 28.12.2023 இல் வங்கியானது வங்கிக் கட்டணங்கள் ரூ. 1 000 ஐ நடைமுறைக் கணக்கில் வரவு வைத்தது.
- 29.12.2023 இல் மின்சாரக் கட்டணக் கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட ரூ. 25 000 காசோலையொன்று கையொப்பத்திலுள்ள வழுக் காரணமாக வங்கியால் மறுக்கப்பட்டிருந்தது.
- 2023 டிசெம்பர் மாதத்தில் வியாபாரக் கடன்கொடுத்தோர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூ. 50 000 காசோலையொன்று 31.12.2023 வரை கொடுப்பனவுக்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.
- வியாபாரக் கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு 30.12.2023 இல் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 45 000 காசோலையொன்று 31.12.2023 வரை வசூலிக்கப்படவில்லை.

நேரடி வைப்புக்கள், நிலையான கட்டளைக் கொடுப்பனவுகள் மற்றும் வங்கிக் கட்டணங்கள் போன்றவை வங்கிக் கூற்று பெறப்பட்ட பின்னரே காசுக் கணக்கில் பதியப்படுகின்றன. மதிப்பிழந்த காசோலைக்கான சீராக்கம் காசுக்கணக்கில் மேற்கொள்ளப்படவில்லை.

**வேண்டப்படுவது:**

(1) காசு மீதியைத் திருத்துவதற்கு தேவைப்படும் சீராக்கங்களைக் காட்டும் 31.12.2023 இல் முடிவடையும் மாதத்துக்கான காசுக்கணக்கு

(2) 2023 டிசெம்பர் மாதத்துக்கான வங்கி இணக்கக்கூற்று

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 40 புள்ளிகள்)**

**6. (அ)** தேசானி PLC இன் பின்வரும் தகவல்களானது 31.03.2024 மற்றும் 31.03.2023 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன.

| | **31.03.2024 இல்** உள்ளவாறு (ரூ.'000) | **31.03.2023 இல்** உள்ளவாறு (ரூ.'000) |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் - கொண்டுசெல் தொகை | 23 500 | 19 750 |
| சொத்துப்பாவனை உரிமை - கொண்டுசெல் தொகை ............ | 12 000 | 7 000 |
| இருப்புக்கள் ............ | 7 500 | 5 400 |
| வியாபார வருமதிகள் ............ | 6 500 | 3 250 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் ............ | 1 500 | 1 100 |
| குத்தகைப் பொறுப்பு ............ | 8 900 | 5 500 |
| வியாபாரக் கொடுக்குமதிகள் ............ | 3 000 | 4 000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி ............ | 700 | 550 |
| நிறுத்தி வைத்த வருவாய்கள் ............ | 7 400 | 6 450 |

**மேலதிக தகவல்கள் :**

(i) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் முறையே ரூ. 5 500 000, ரூ. 4 300 000 ஆக இருந்தது.

(ii) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு மற்றும் சொத்துப்பாவனை உரிமையின் பெறுமானத் தேய்வு ஆகியன முறையே ரூ. 2 800 000, ரூ. 1 400 000 ஆக இருந்தது.

(iii) கம்பனியானது 01.10.2023 இல் மோட்டார் வாகனமொன்றை ரூ. 800 000 இலாபத்துடன் காசிற்கு விற்பனை செய்தது. இத்திகதியில் இந்த மோட்டார் வாகனத்தின் கொண்டுசெல் தொகையானது ரூ. 2 600 000 ஆக இருந்தது. மேலும், கம்பனியானது நடைமுறை வருடத்தில் இயந்திரமொன்றைக் காசுக்குக் கொள்வனவு செய்தது.

[பக். 10 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers! CamScanner

(iv) கம்பனியானது மோட்டார் வாகனமொன்றின் சொத்துப்பாவனை உரிமையினைப் பெறுவதற்காக புதிய குத்தகை உடன்படிக்கையொன்றை 01.04.2023 இல் செய்துள்ளது. இத்தினத்தில் ஆரம்ப தவணைப் பணம் செலுத்தப்பட்டதுடன் குத்தகைத் தொகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதி ரூ. 5 400 000 ஆக இருந்தது.

(v) 31.03.2024 இல் குத்தகை வட்டி உட்பட ரூ. 900 000 குத்தகை தவணைக்கட்டணங்கள் செலுத்தப்பட்டது.

(vi) 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட பங்கு வழங்கல்கள் பின்வருமாறு:
- காசு கைமாறு ரூ. 8 500 000 க்கான பொதுப் பங்கு வழங்கல்
- ரூ. 2 500 000 நிறுத்தி வைத்த வருவாயை மூலதனமாக்குவதன் மூலம் பங்குகள் வழங்கல்

(vii) கம்பனியானது நடைமுறை வருடத்தில் இடைக்காலப் பங்குலாபத்தையும் செலுத்தியிருந்தது.

**வேண்டப்படுவது :**

'LKAS 7 - காசுப்பாய்ச்சல் கூற்று' இன்படி 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான தேசானி PLC இன் காசுப்பாய்ச்சல் கூற்று (*செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலினைக் காட்டுவதற்கு நேரில் முறையினைப் பயன்படுத்துக*).

(20 புள்ளிகள்)

(ஆ) முன்பள்ளியொன்றின் முகாமையானது 2025 ஜனவரியில் விளையாட்டுப் போட்டியொன்றை நடத்துவதற்கு திட்டமிடுகிறது. இந்த முன்பள்ளியில் 70 மாணவர்கள் உள்ளனர். விளையாட்டுப் போட்டிக்கான எதிர்பார்க்கப்படும் கிரயங்கள் பின்வருமாறு:

| | ரூ. |
|---|---|
| மாணவரொருவரின் விளையாட்டு சீருடைக்கான கிரயம் | 6 000 |
| மாணவரொருவரின் உணவுப்பொதியின் கிரயம் | 400 |
| மாணவரொருவரின் பங்குபற்றல் சான்றிதழை அச்சிடுவதற்கான கிரயம் | 100 |
| விளையாட்டு நிகழ்வுகளுக்கான அன்பளிப்புகளுக்கான கிரயம் | 30 000 |
| கதிரைகளுக்கான வாடகை மற்றும் அலங்காரக் கிரயம் | 40 000 |
| விளையாட்டு மைதானத்தை தயார்படுத்துவதற்கான கிரயம் | 25 000 |
| ஒலிபெருக்கிக்கான வாடகைக் கிரயம் | 10 000 |
| விருந்தினருக்கான உணவுக் கிரயம் | 55 000 |

**மேலதிக தகவல்கள்:**

விளையாட்டுப் போட்டியின் கிரயங்களை பின்வரும் வழிகளில் பெற்று நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் ஒவ்வொரு மாணவருக்குமான விளையாட்டு சீருடைக்காக ரூ. 2 000 நன்கொடை அளிப்பதென முன்பள்ளியின் பழைய மாணவர்கள் இணங்கியுள்ளனர்.
- முன்பள்ளியின் முகாமைச் சபையின் தலைவர் விளையாட்டுப்போட்டியின் ஒலிபெருக்கிக்கான முழுமையாக வாடகைக் கிரயத்திற்கு அனுசரனை வழங்க இணங்கியுள்ளனர்.
- மிகுதித் தொகையானது பங்குபற்றும் ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் வசூலிக்கப்படும் கட்டணம் மூலம் ஈடு செய்யப்படும்.

**வேண்டப்படுவது :**

முன்பள்ளியில் ஏற்படும் கிரய உருப்படிகளைக் கருத்திற்கொண்டு பின்வருவனவற்றைக் கணிக்குக.

(1) விளையாட்டுப் போட்டிக்கான மொத்த நிலையான கிரயம்

(2) மாணவர் ஒருவருக்கான மாறும் கிரயம்

(3) ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ரூ. 7 500 வசூலிக்கப்படுமாயின், விளையாட்டுப் போட்டியின் மொத்தக் கிரயத்தை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கை

(4) ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ரூ. 7 500 வசூலிக்கப்பட்டும் முன்பள்ளியின் அனைத்து மாணவர்களும் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுமிடத்தும் எதிர்பார்க்கப்படும் மேலதிக தொகை

(5) விளையாட்டுப் போட்டியில் 55 மாணவர்கள் பங்குபற்றுமிடத்து ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ரூ. 9 500 வசூலிக்கப்படுமாயின் பாதுகாப்பு எல்லை (மாணவர்கள்)

(6) விளையாட்டுப் போட்டியில் 60 மாணவர்கள் பங்குபற்றுமிடத்து நிலையான கிரயத்தின் ஒரு பகுதியை ஈடுசெய்ய ரூ. 45 000 நன்கொடையாகப் பெறப்படுமாயின் மொத்த கிரயத்தை ஈடுசெய்ய ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் வசூலிக்கப்படவேண்டிய கட்டணம்.

(20 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

* * *

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers! CamScanner

PARCEL NO

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක
# පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න





කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්

PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා

**සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට**

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න